

மதுரை மாவட்ட தி.மு.க. சார்பாக நடைபெற்ற வினாடி வினா நிகழ்ச்சிக்கு வருகை தந்த தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி.யை மதுரை மாநகர் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ர.ஜெயவிஷ்வதர்ஷன் நினைவு பரிசு வழங்கி வரவேற்று வாழ்த்து பெற்றார்.



தேனி மாவட்டம் தி. சுப்புலாபுரத்தில் நேற்று நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமில் கலெக்டர் ஷஜீவனா, மகாராஜன் எம்.எல்.ஏ ஆகியோர் பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டு திட்ட புதிய அட்டையினை வழங்கினார்.

# நத்தத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்



**நத்தம், டிச, 3**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் அதிமுக சார்பாக சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.முகாமை முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் எம்.எல்.ஏ தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். முகாமில் கண்புரை,பார்வை குறைபாடு, கண் எரிச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் நத்தம் ஒன்றிய குழு தலைவர் கண்ணன்,அதிமுக நகர செயலாளர் சிவலிங்கம், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன்,நகர அவைத் தலைவர் சேக்ஒலி, பண்ணுவார்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆண்டிச்சாமி, தெற்கு ஒன்றிய எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் குப்பான், உள்ளிட்ட ஒன்றிய, நகர, கிளை கழக அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த முகாமின் மூலம் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்..

# திருவில்லிபுத்தூர் பள்ளி மாணவர்கள் 13 பேர் மாநில ஜிம்னாஸ்டிக் போட்டிக்கு தேர்வு



**விருதுநகர் நவ.3.**

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில், ஜூடோ மற்றும் ஜிம்னாஸ்டிக் போட்டியில், மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் மற்றும் வீரர்களை தேர்வு செய்யும் போட்டிகள் நடைபெற்றது.

சிவகாசி ஜேசீஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான, ஜூடோ மற்றும் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில், திருவில்லிபுத்தூர் சி.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

ஜூடோ போட்டியில் 5 மாணவர்களும், ஜிம்னாஸ்டிக் போட்டியில் 8 மாணவ, மாணவிகளும் என மொத்தம் 13 பேர், தகுதி சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிகளுக்கு தேர்வான மாணவ, மாணவிகளுக்கு பள்ளி தாளாளரும், தலைமை ஆசிரியர் சாம்ஜெபராஜ் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் வாழ்த்துகள் கூறி பாராட்டு தெரிவித்தனர்.

மாநில போட்டிக்கு தேர்வு பெறும் வகையில் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பான பயிற்சிகளை வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் டேவிட் முத்துகுமாருக்கு பள்ளி நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்தனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# தனுஷ்கோடிக்கு இலங்கை அகதிகள் ஏழு பேர் வருகை



**ராமேஸ்வரம், டிச.3**

இலங்கை மன்னார் பகுதியில் இருந்து கள்ளத்தோணி மூலம் ஒரு வயது குழந்தை உள்பட இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் தனுஷ்கோடி கடல் பகுதிக்கு நேற்று வந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி கடல்பரப்பில் இலங்கை அகதி வந்து இருப்பதாக அப்பகுதி மீனவர்கள் கடலோர பாதுகாப்பு குடும்ப போலீசார்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர் அதன் பேரில் அங்கு சென்ற போலீசார்கள் ஒரு வயது சிறுமி உட்பட பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஏழு பேரை பிடித்தனர். அவர்களிடம் போலீஸார்கள் விசாரணை செய்தனர். விசாரணையில் இலங்கை மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் மனைவி கனனஜோதி( 46 )மகன் சித்து(12), மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த அமுதன் (32),கீதாஞ்சனா (29), லிங்க் சன் (12), நிவேதா (5),கேசவி (1) சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்தது மேலும் போலீசார் விசாரணை மேற்கொண்டதில் கன்னஜோதி கணவர் கேராளவில். வேலை பார்த்துக்கொண்டு இருப்பதாகவும் அவரை பார்பதற்கு வந்த்தாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் போலீசார் விசாரணை செய்து மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மண்டபம் அகதி முகாமில் தங்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# திருமங்கலம் ரயில் நிலையத்தில் முதலாவது பிளாட்பார சீரமைப்பு பணிகளால் மாயமான குடிநீர் குழாய்கள்

## பொதுமக்கள், பயணிகள் அவதி



**திருமங்கலம்.டிச.03.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் ரயில் நிலையத்தின் முதலாவது பிளாட்பாரம் சீரமைப்பு பணிகளின் போது மாயமான குடிநீர் குழாய்களால் பயணிகளும் பொதுமக்களும் தாகத்தால் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய ரயில் நிலையமாக திருமங்கலம் ரயில் நிலையம் திகழ்கிறது.இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான பயணிகள் தங்களது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.தற்போது திருமங்கலம் ரயில் நிலையத்தில் முதலாவது பிளாட்பாரம் சீரமைப்பு பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது.இந்த சீரமைப்பு பணிகளுக்காக முதலாவது பிளாட்பாரத்தில் இருந்த பயணிகள் காத்திருப்பு இருக்கைகள்,குடிநீர் குழாய்கள் அனைத்தும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு விட்டது.இதனால் ரயில் பயணம் மேற்கொள்ள வேண்டிய பயணிகள் அனைவரும் தரையில் அமர்ந்தோ அல்லது கால்கடுக்க காத்து நின்றோ முதலாவது பிளாட்பாரத்தின் மூலம் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதனிடையே ரயிலில் பயணம் மேற்கொள்பவர்களுக்கும், ரயிலில் பயணம் செய்ய வந்திருப்பவர்களுக்கும் தேவையான குடிநீர் வசதியை செய்து கொடுத்திடும் குடிநீர் குழாய்கள் அனைத்தும் திருமங்கலம் ரயில் நிலையத்தின் முதலாவது பிளாட்பாரத்தில் இல்லாமல் மாயமாகி விட்டதால் பயணிகள் தாகத்தால் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக முதலாவது பிளாட்பாரத்தில் குடிநீர் இல்லாத காரணத்தினாலும்,சிற்றுண்டி ஸ்டால் மூடப்பட்டு விட்டதர்லும் பயணிகள் தாகத்தால் தவித்திடும் அவல நிலை ஏற்படுகிறது.எனவே திருமங்கலம் ரயில் நிலைய முதலாவது பிளாட்பாரத்தில் பயணிகளின் நலன் கருதி மீண்டும் குடிநீர் குழாய்களை அமைத்திட வேண்டும் என்றும்,மூடப்பட்டுள்ள சிற்றுண்டி ஸ்டாலினை முதலாவது பிளாட்பாரத்தில் உடனடியாக அமைத்திட வேண்டும் எனவும் மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகத்திற்கு பொதுமக்களும்,ரயில் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கள்ளிக்குடி அருகே திடீரென்று தீப்பற்றி எரிந்த கார் போலீஸ்காரர் குடும்பத்துடன் உயிர் தப்பினார்



**திருமங்கலம்.டிச.03,**

தென்காசி அருகேயுள்ள ஆலங்குளத்தை சேர்ந்தவர் சொரிமுத்து (35). இவர் உளவுப் பிரிவு போலீஸ்காரராக ஆலங்குளத்தில் பணியாற்றி வருகிறார். இவருடைய தந்தை கோயம்புத்தூரில் வசித்து வருகிறார். இந்நிலையில் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் தன்னுடைய தந்தையை பார்ப்பதற்காக காரில் தனது குடும்பத்தினருடன் போலீஸ்காரர் சொரிமுத்து கோயம்புத்தூருக்கு சென்றுள்ளார். அப்போது செல்லும் வழியில் கள்ளிக்குடி - சிவரக்கோட்டை இடையே உள்ள தனியார் பெட்ரோல் பங்க் அருகே வந்த போது காரின் முன் பக்கம் இன்ஜினில் இருந்து திடீரென்று புகை வந்துள்ளது. இதையடுத்து உடனடியாக கார் சாலையோரம் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் கார் நிறுத்தப்பட்ட போது கண் இமைக்கும் நேரத்தில் கார் முழுவதும் திடீரென தீ பற்றி எரிந்தது.இதில் சுதாரித்து கொண்ட போலீஸ்காரர் சொரிமுத்து காரில் தன்னுடன் வந்த மனைவி மற்றும் குழந்தைகளை காரில் இருந்து கண்ணாடியை உடைத்துக் கொண்டு உடனடியாக இறங்கியுள்ளார். இதனால் அவர்கள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு சிறைத்து வந்து நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் காரின் பெரும்பகுதி தீக்கிரையாகி விட்டது.இந்த சம்பவம் குறித்து கள்ளிக்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஊரகவளர்ச்சித் துறையின் வளர்ச்சி திட்டப் பணிகள்: ராமநாதபுரத்தில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் ஆய்வு



**ராமநாதபுரம்,டிச.3-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் சிட்கோ,வேளாண்மைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் அர்ச்சனாபட்நாயக் ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் சிட்கோ, வேளாண்மைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் முன்னிலையில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் அர்ச்சனா பட்நாயக் ஆய்வு மேற்கொண்டார். அப்போது உச்சிப்புளி, அரியனேந்தல் மற்றும் தெளிச்சாத்தநல்லூர்; ஆகிய இடங்களில் உள்ள சிட்கோ தொழில் பேட்டை மையங்களில் இயங்கி வரும் வணிக நிறுவனங்களை பார்வையிட்டு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு மாவட்ட தொழில் மையம் மூலம் தக்க வழி காட்டுதலை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தது டன், தொழில் முனைவோர் மேலும் ஆர்வமுடன் செயல்பட்டு அதிகளவில் தொழில் மையங்களை உருவாக்கிட வேண்டுமென தெரிவித்தார்.

பின்னர் மண்டபம் ஊராட்சி ஒன்றியம், தெற்கூர் கிராமத்திலிருந்து சாத்தான்குளம் வரை முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.93.332 லட்சம் மதிப்பீட்டில் 1.98 கிலோமீட்டர் தூரம் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

சாலையின் இரு பக்கங்களிலும் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார், தொடர்ந்து களிமண்குண்டு ஊராட்சி, சண்முகவேல் பட்டினம் கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராமம் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை சீர்படுத்தி திறந்தவெளி கிணறு அமைத்து சோலார் மின்இணைப்பு வழங்கி சொட்டு நீர் உபகரணங்கள் பயன்படுத்தி பலவகை மரக் கன்றுகள், தென்னங்கன்றுகள் நடுவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டார். இதை போல் மற்ற இடங்களிலும் பயன்பாடற்ற தரிசு நிலங்களை சீரமைத்து விவசாயிகள் வேளாண் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து விவசாயிகள் கடலோரப் பகுதியில் அதிக அளவு உப்பு தண்ணீராக விலை நிலங்கள் பகுதியில் இருப்பதால் சொட்டுநீர் பாசன திட்டத்தில் விவசாய பணிகளை மேற்கோள்ள சிரமமாக உள்ளது. அதனால் எங்கள் பகுதிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திலிருந்து பண்ணை குட்டை அமைத்து அதன் மூலம் தண்ணீர் பாசனம் முறையை கையாளும் வகையில்

திட்டங்களை மாற்றித்தர உதவிட வேண்டுமென தெரிவித்தார்கள். இது குறித்து வேளாண்மைத்துறை செயலாளரிடம் கருத்துக்களை தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அலுவலர்கள் மற்றும் விவசாயிகளிடம் தெரிவித்தார்

பின்னர் அரியனேந்தல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியை மேற்பார்வையிட்டு விவசாயிகளுக்கு அரசு வழங்கும் திட்டங்களில் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தது டன் விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் விதைகளை போதிய அளவு இருப்பில் வைத்துக்கொள்ள அலுவலர்களுக்கு தெரிவித்த துடன் அருகாமையிலுள்ள நியாயவிலைக் கடைக்குச் சென்று பொதுமக்களுக்கு வழங்கி வரும் உணவுப்பொருட்களின் இருப்பு குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) பொ.ரத்தினசாமி, பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரசூல், உதவி ஆட்சியர் (பயிற்சி) சிவானந்தம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சரஸ்வதி, கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் முத்துக் குமார், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனுஷ்கோடி, மாவட்ட தொழில்மைய பொறியாளர் பிரதீப் குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சந்தோஷம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு திருமங்கலம் அரசு மருத்துவமனையில் விழிப்புணர்வு உறுதிமொழியேற்பு



**திருமங்கலம்.டிச.03.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு மருத்துவமனையின் ஏ.ஆர்.டி மையம் சார்பில் தலைமை மருத்துவர் டாக்டர்.பி.ராம்குமார் தலைமையில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியேற்பு நிகழ்வு சிறப்புடன் நடைபெற்றது.

டிசம்பர் 1-ம் தேதி உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு திருமங்கலம் அரசு மருத்துவமனை கூட்டு மருந்து சிகிச்சை மையத்தின் (ஏ.ஆர்.டி) சார்பில் உலக எய்ட்ஸ் தினவிழிப்புணர்வு உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது. இதில் திருமங்கலம் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பி.ராம்குமார் கலந்து கொண்டு தலைமையேற்று எய்ட்ஸ் தின விழிப்புணர்வு குறித்து சிறப்புரை யாற்றியது டன், உலக எய்ட்ஸ் தின உறுதிமொழியை வாசிக்க அதனை அங்கு திரண்டிருந்த மருத்துவர்கள்,திருமங்கலம் அரசு ஹோமியோபதி மருத்துவக்கல்லூரி பேராசிரியர்கள், நாட்டு நலப்பணி திட்ட மாணவ, மாணவிகள், சித்த மருத்துவப்பிரிவு மருத்துவர், மருத்துவமனை செவிலியர்கள்,கண்காணிப்பாளர்கள்,ஊழியர்கள் மற்றும் ஏ.ஆர்.டி மையத்தின் காசநோய் பிரிவு பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் திரும்பச் சொல்லி உறுதிமொழியேற்றுக் கொண்டனர்.இதனை தொடர்ந்து ஏ.ஆர்.டி மைய மருத்துவர் டாக்டர் செல்வராஜ் மனோகரன் 2023-ம் ஆண்டு உலக எய்ட்ஸ் தின கருத்து வாசகமான, ஹெச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொற்றினை குறைத்திடும் செயலை முன்னெடுப்போம் என்பது குறித்தும்,2030-ம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் இல்லா சமுதாயத்தை உருவாக்கிட முடியும் எனவும் விளக்கமளித்து உரையாற்றினார். இதனை தொடர்ந்து திருமங்கலம் அரசு மருத்துவமனை ஏ.ஆர்.டி மையத்தில் சிறப்பு குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு திருமங்கலம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் பி.ராம்குமார் தலைமை வகித்தார்.மையத்தின் ஆலோசகர் பரணிதரன் வரவேற்றார். குழந்தைகள் நல மருத்துவர்கள் டாக்டர் ராஜேஸ்கண்ணா, டாக்டர் கார்த்திக் சந்தர் மற்றும் ஏ.ஆர்.டி மைய மருத்துவர் டாக்டர் செல்வராஜ் மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.இதனை தொடர்ந்து விழாவில் பங்கேற்ற சிறப்பு குழந்தைகள் அனைவருக்கும் பரிசு பொருட்கள், ஊட்டச்சத்து தொகுப்பு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தலைமை மருத்துவர் டாக்டர் பி.ராம்குமார் வழங்கினார்.விழாவின் நிறைவில் ஏ.ஆர்.டி மைய செவிலியர் வரலட்சுமி நன்றி கூறினார்.

# நத்தம் பகுதியில் நாளை மின்தடை

**நத்தம், டிச, 3**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் உப மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நாளை (4-12-2023) திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நத்தம்,கோவில்பட்டி, செல்லப்பநாயக்கன்பட்டி,பொய்யாம்பட்டி, மூங்கில்பட்டி, ஊராளிபட்டி, சேத்தூர், அரவங்குறிச்சி, சமுத்திராப்பட்டி, கோட்டையூர், சிறுகுடி, பூசாரிபட்டி, பூதகுடி, பன்னியாமலை, உலுப்பகுடி, காட்டுவேலம்பட்டி, ஆவிச்சிபட்டி, தேத்தாம்பட்டி, மற்றும் ஒடுகம்பட்டி ஆகிய பகுதிகளில் மின்சாரம் வினியோகம் தடை செய்யப்படும் என நத்தம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.2.81 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்



**பெரம்பலூர்,டிச.03-**
போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் , பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் கலெக்டர் க.கற்பகம் தலைமையில் (02.12.2023) பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

அதனடிப்படையில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல மக்கள் நலத்திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குன்னம் ஊராட்சியில் ரூ.11.50 லட்சம் மதிப்பீட்டில் காலனி தெருவில் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கும் பணியினையும், ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் அருந்ததியர் கோவில் அருகே சிறு பாலம் அமைக்கும் பணியினையும், ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் காலனி தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணியினையும், அயோத்திதாசர் திட்டத்தில் ரூ.9.98 லட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் நியாய விலை கடை வரை சாலை வலுப்படுத்துதல் பணியினையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.13.16லட்சம் மதிப்பீட்டில் காலனி வடக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், ரூ.16.04 லட்சம் மதிப்பீட்டில் காலனித் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கொளப்பாடி ஊராட்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்து ரூ.61.00 லட்சம் மதிப்பீட்டில் ஆய்க்குளம் தார்சாலை அமைக்கும் பணி, ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் மனக்கட்டு தார்சாலை அமைக்கும் பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுவேட்டக்குடி ஊராட்சி தெற்கு தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.5.58 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும், புதுவேட்டக்குடி ஆதிதிராவிடர் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியும், காடூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.3.15 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும், துவக்கி வைக்கப்பட்டுள்ளது.இருபுறமும் கழிவுநீர் சரிவர செல்லும் வகையில் சாலை அமைக்க வேண்டும் எனவும், அனைத்துப் பணிகளும் தரமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்குடிசையில் உள்ள சின்னாள் ஓடை வாய்க்காலின் குறுக்கே மக்கள் எளிதில் சென்று வர ஏதுவாக உயர்மட்ட பாலம் வேண்டும் என்பது கிராம மக்களின் சுமார் 20 ஆண்டு கால கோரிக்கையாக இருந்து வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.42.82 லட்சம் மதிப்பீட்டில் புதுக்குடிசையில் கட்டப்பட்ட பாலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விவசாய பெருமக்கள் அன்றாடம் பயன்பெறுவார்ககள். இந்த பாலத்தை திறந்து வைத்ததன் மூலம் பொதுமக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் பாஸ்கர், மரு.கருணாநிதி மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,டிச.03-**
திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல் ராஜ், , கலெக்டர் தி.சாருஸ்ரீ., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சி.பிரயங்கா., திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் கோ.பாலசுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

வடகிழக்கு பருவமழையின்போது இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் மூலமாக வெளியிடப்படும் முன்னெச்சரிக்கை அறிவிப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் கவனமாக பின்பற்றவும். மேலும் அதிக மழை பொழிவு உள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கட்டுப்பாட்டு அறை 24ஓ7 இயங்கக்கூடிய அளவில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக புகார்கள் தெரிவிக்கப்பட்டு, அதன்வழியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

துணை கலெக்டர் நிலையிலான அனைத்து வட்டாரங்களுக்கும் ஒரு குழு அளவில் ஒன்பது அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சரக அளவிலும் கோட்ட அளவிலும் 13 வகையான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதிக்கக்கூடிய பகுதிகளாக 176 பகுதிகளில் 41 பகுதிகள் மிதமாக பாதிக்கக்கூடிய பகுதிகளும், 68 பகுதிகள் மிதமான பகுதிகளும், 67 பகுதிகள் குறைவாக பாதிக்கக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு அதில் 200 நிவாரண முகாம்கள் அமைக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தீயணைப்பு துறையினரால் திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 152 மாதிரி ஒத்திகை நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு குழுவினரால் இரண்டு நாள் மாதிரி ஒத்திகை பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் மழைக்காலங்களில் வெளியில் வரும் பாம்புகளை பிடிக்க பாம்பு பிடி வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 642 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 163 ஜே.சி.பி இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மீன்வளத்துறை மூலம் 341 படகுகள் தயார் நிலையில் உள்ளது. சுகாதார துறை மற்றும் பொதுசுகாதார துறை மூலம் மழைநீர் தேங்கிய இடங்களில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படா வண்ணம் தடுக்க போதிய தடுப்பூசிகள் கையிருப்பு உள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்திற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டுள்ளது என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

முன்னதாக, காவல் துறையினரால் பேரிடர் கால முன்னெச்சரிக்கையினை தடுக்கும் விதமாக இருப்பில் உள்ள மரம் அறுக்கும் கருவி, மோட்டார் படகு, மிதவை ஆடைகள், தீயணைக்கும் கருவி உள்ளிட்ட பொருட்கள் காட்சியப்படுத்தியதனை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.சண்முகநாதன், முதுநிலை மண்டல மேலாளர் இராஜாஜன், வருவாய் கோட்டாட்சியர்கள் சங்கீதா (திருவாரூர்), செல்வி.கீர்த்தனா மணி (மன்னார்குடி), மன்னார்குடி நகர் மன்றத்தலைவர் மன்னைசோழராஜன், திருவாரூர் நகர் மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன், தனி வட்டாட்சியர் (பேரிடர்) பரஞ்ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், கலெக்டர் ஆய்வு



**நாகப்பட்டினம்,டிச.03-**
நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ரமேஷ் சந்த் மீனாகலெக்டர் ஜானி டாம் வர்கீஸ், ஆகியோர்; (02.12.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்; கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில்; தொடர்ச்சியாக கனமழை பொழிந்;து வருகிறது. அதனையடுத்து இன்றையதினம் நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட மறைமலைநகர் மற்றும் ஊசிமாதா கோவில் ஆகிய பகுதிகளில் கனமழை காரணமாக மழைநீர் தேங்கியுள்ளதை நகராட்சி பணியாளர்கள் அகற்றும் பணிகளை பார்வையிட்டு, மழைநீரை விரைவில் அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, வேளாங்கண்;ணி பேரூராட்சி சுனாமி குடியிருப்பு பூக்காரத் தெரு பகுதியில்; மழைநீர் தேங்கியுள்ளதை அகற்றும் பணிகளையும், செருதூரில் அமைக்கப்பட்டுள்ள புயல் பாதுகாப்பு மைய நிவாரண முகாமில் கனமழையால் பாதிக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் இருப்புகள் குறித்தும் மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கை கருவியினையும் ஆய்வு மேற்கொண்டார். மீனம்பநல்லூர் கிராமத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களின் சேதங்கள் குறித்தும், மற்றும் குண்டூரான் வெளி கிராமத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களின் சேதங்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தலைஞாயிறு அரசு உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் கனமழையால் பாதிக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் இருப்பு குறித்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி.ரா.பேபி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் கலெக்டர் ரஞ்ஜீத்சிங், நாகப்பட்டினம் சார் கலெக்டர் பனோத் ம்ருகேந்தர் லால், நகர மன்றத் தலைவர் ரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் தாமஸ் ஆல்வா எடிசன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம்

## சு.திருநாவுக்கரசர் எம்.பி. தலைமையில் நடைபெற்றது




**திருச்சி,டிச.03-**
திருச்சிராப்பள்ளி மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினருமான சு.திருநாவுக்கரசர் தலைமையில் கலெக்டர் மா.பிரதீப் குமார், முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மாநகராட்சி, நகராட்சி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சமூக பாதுகாப்பு திட்டம், மாவட்ட இ-சேவை மையம், நில அளவை, சுகாதார நலப்பணிகள், பள்ளி கல்வித்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், சத்துணவு, புவியியல் மற்றும் சுரங்கங்கள் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மாவட்ட தொழில் மையம், மாவட்ட திறன் பயிற்சி நிறுவனம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், சமூக நல அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், செயல்படுத்தப்படும் மத்திய அரசின் நிதி சார்ந்த திட்டத்தின் கீழ் தேசிய வேளாண் வளர்;ச்சித்திட்டம், தேசிய ஊரக குடிநீர் வழங்கும் திட்டம், ஜல்ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்கம், தேசிய சமூக பாதுகாப்புத் திட்டம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி அவாஸ்யோஜனா, தீனதயாள் அந்தோதயா யோஜனா, பிரதமந்திரி கிராம சாலைகள் திட்டம், பாராளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டம், அழகிய நகரமயமாக்கல் பணி, உட்கட்டமைப்பு தொடர்பான பணிகள் - தொலை தொடர்பு, அஞ்சல் துறை, ரயில்வே, நெடுஞ்சாலை, சுகம்யா பாரத் அபியான் உள்ளிட்ட பல்வேறு திட்ட செயலாக்கங்கள் குறித்து, கண்காணிப்புக் குழுவின் தலைவரான திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் ஆய்வு மேற்கொண்டார். மேலும், திட்டப்பணிகளை தரமாகவும் விரைந்து செயல்படுத்தியும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சாலை விபத்துக்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளையும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினருமான சு.திருநாவுகரசர் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மகளிர் திட்ட அலுவலர் கி.ரமேஷ்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.இராஜேந்திரன், மாநகர காவல் துணை ஆணையர் அன்பு, உதவி ஆணையர் போக்குவரத்துக் காவல் (மாநகரம்) பி.ஜோசப் நிக்சன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திட்டச்சேரி அருகே துண்டம் முடிகொண்டான் ஆற்றில் ஆகாயத்தாமரை அகற்றும் பணி

## பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு

**நாகப்பட்டினம்,டிச.03-**
திட்டச்சேரி அருகே முடிகொண்டான் ஆற்றில் ஆகாயத்தாமரை செடிகள் அகற்றும் பணி அதிகாரிகள் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திருமருகல் ஒன்றியத்தில் சுமார் 15 கிலோமீட்டர் தூரம் கொண்ட சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களுக்கு பாசனம் மற்றும் வடிகால் ஆறாக முடிகொண்டான் ஆறு உள்ளது.இந்த ஆற்றில் சீயாத்தமங்கை முதல் கொத்தமங்கலம் வரை அதிக அளவில் ஆகாயத்தாமரை செடிகள் மண்டிக்கிடக்கிறது.

இதனால் மழைக்காலங்களில் மழைநீர் வடிய முடியாமல் பயிர்கள் மழைநீரில் முழ்கி சேதமடையும் நிலை உள்ளது. எனவே உடனடியாக ஆற்றில் மண்டிக்கிடக்கும் ஆகாயத் தாமரைகளை அகற்ற வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்து இருந்தனர். இதைத்தொடர்ந்து துண்டம் பகுதியில் முடிகொண்டான் ஆற்றில் ஆகாயத்தாமரை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.இந்த பணிகளை திருமருகல் பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்கள் சரவணன், செல்வகுமார் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்

# தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்



**கும்பகோணம்,டிச.03-**
கும்பகோணம் அருகே திருபுவனத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மோடி மாற்றுத்திறனாளிகளை திவ்யாங் (தெய்வப் பிள்ளைகள்) என பெயரிட்டால் மட்டும் போதுமா?, மாற்றுத்திறனாளிகளுக்கு நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு நோக்கி முன்னேறுவது என்பதை உருவாக்குவது எப்போது?, சுதந்திரமான தேசிய கமிஷன் அமைப்பது எப்போது?, தேசிய நிதியம் உருவாக்குவது எப்போது?, கல்வி, வேலை, தடையற்ற சூழலை உறுதிப்படுத்துவது எப்போது?, மாற்றுத்திறனாளிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி, கடந்த 10 ஆண்டுகளாக ரூ.300 உதவித்தொகையாக கொடுத்து வருவதை கூடுதல் படுத்தி உயர்த்தி வழங்குவது எப்போது? எனக்கேட்டு டிசம்பர் 3 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று ஒன்றிய மோடி அரசை கண்டித்து தமிழ்நாடு தழுவிய மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக, தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம் சார்பில் திருபுவனம் கடைவீதியில் ஒன்றிய தலைவர் சுகுமார் தலைமையில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**NOTICE**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE AT ALANDUR**
**O.S.No. 149 of 2022**
**Vaels Ravindra Bharathi Global School**
Vs
... Plaintiff
**Hariharan & another**
... Defendant
**To:**
**1. Mr.HARIHARAN,**
**2. Mrs.BARATHI,**
Plot No:1-C, F2, Ambal Nagar, 8th Street, Keelkattalai, Chennai-600 117
Sir,
Kindly take notice that the plaintiff above named filed the suit for Recovery of money as against you the suit is stand posted for your appearance. Hence be present on **18.12.2023 at 10.00 am** before the above court either in person or through your advocate, failing which the matter will be decide ex-parte.
**M.SUSHMA**
Advocate

**BEFORE THE HON'BLE XXI ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI**
**I.A. No.2 of 2022 In O.S. No.1156 of 2020**
M/s. Syndicate Bank, Thiruvanmiyur Branch,
...Petitioner/Plaintiff
Versus
1. Rey Kumarappa,
2. V. Krishnamoorthy,
3. U. Ashok Kumar,
...Respondents/Defendants
To
Rey Kumarappa, (R1)
aged 56 years,
S/o. N. Rathinam,
Old No.16, New No.18,
1st Floor, Karunya Street,
Srinivasa Nagar,
Ayyappakkam,
Chennai-600 077.
இதனால் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மேற்படி வழக்கானது பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூ.7,33,664.16/- கோரி வாதியால் தொடரப்பட்டு, 30.11.2023 அன்று மாண்புமிகு நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்து, முதல் பிரதிவாதி ஆஜராக வேண்டி 22.12.2023-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கில் 22.12.2023 அன்று காலை 10.30 மணிக்கு மாண்புமிகு நீதிமன்றத்தின் முன் முதல் பிரதிவாதி தவறாமல் ஆஜராகும்படி அறிவிக்கப்படுகிறார்கள்.
இப்படிக்கு
க. சுரேந்தர்,
வழக்குரைஞர்.

**SPL I Court**
சிறுவழக்குகள் நீதிமன்றம்.
மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம்.சென்னை.
**MCOP. NO.5342. of 2022.**
1. M.Pavanammai
2. Hariprasath
3. Ajithkumar.
4. Chandrammal
மனுதாரர்கள்
எதிர்
1. Abdul Ashraf
2. S.Parthiban.
- எதிர் மனுதாரர்கள்.
பெறுநர்
Abdul Ashraf
W/o. AbdulRahim
No: 33 Mohammed Street,Sembiam,
Perambur, Chennai-600 011.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற: 10/01/2024. தேதி அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அலேது தங்கள் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30. மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும்.
S. PRABAVATHI
S.DEVASUNDARAM
மனுதாரரின் வழக்கறிஞர்

**SPL I Court**
சிறுவழக்குகள் நீதிமன்றம்.
மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம்.சென்னை.
**MCOP. NO.5342. of 2022.**
1. M.Pavanammai
2. Hariprasath
3. Ajithkumar
4. Chandrammai
மனுதாரர்கள்
எதிர்
1. Abdul Ashraf
2. S.Parthiban.
- எதிர் மனுதாரர்கள்.
பெறுநர்
S. Parthiban,
S/o.. A.m. Sampath.,
No: 21/8, New NO: 15,
Swamy Vivekananda avenue,
1st Cross street,
Anna Nagar,
Pattabiram, Chennai-600 072.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற: 10/01/2024. தேதி அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அலேது தங்கள் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30. மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும்.
S. PRABAVATHI
S.DEVASUNDARAM
மனுதாரரின் வழக்கறிஞர்

**SPL I Court**
சிறுவழக்குகள் நீதிமன்றம்.
மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம்.சென்னை.
**MCOP. NO.5343. of 2022.**
1. L. Saminathan.
2. V. Sugana.
3. S. Karthik.
4. S. Mohan.
மனுதாரர்கள்
எதிர்
1. Abdul Ashraf
2. S.Parthiban.
- எதிர் மனுதாரர்கள்.
பெறுநர்
S. Parthiban,
S/o. A.m. Sampath.,
No: 21/8, New NO: 15,
Swamy Vivekananda avenue,
1st Cross street, Anna Nagar,
Pattabiram, Chennai-600 072.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற: 10/01/2024. தேதி அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அலேது தங்கள் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30. மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும்.
S. PRABAVATHI
S.DEVASUNDARAM
மனுதாரரின் வழக்கறிஞர்

**SPL I Court**
சிறுவழக்குகள் நீதிமன்றம்.
மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம்.சென்னை.
**MCOP. NO.5343. of 2022.**
1. L. Saminathan.
2. V. Sugana.
3. S. Karthik.
4. S. Mohan.
மனுதாரர்கள்
எதிர்
1. Abdul Ashraf
2. S.Parthiban.
- எதிர் மனுதாரர்கள்.
பெறுநர்
Abdul Ashraf
W/o. AbdulRahim
No: 33 Mohammed
Street,Sembiam,
Perambur, Chennai-600 011.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற: 10/01/2024. தேதி அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அலேது தங்கள் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30. மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும்.
S. PRABAVATHI
S.DEVASUNDARAM
மனுதாரரின் வழக்கறிஞர்

BEFORE THE XX ASST CITY CIVIL COURT, CHENNAI
O.S. No. 2158 of 2022
KARNATAKA BANK LTD.,
Cathedral Road Branch,
No.2/11&2/12,
Conron Smith Road,
Gopalapuram, Chennai-600 086.
Plaintiff
-Vs-
Mr.K.Karthikeyan,
S/o.S.Krishnan,
No.24, 6 Street,
Padmavathy Nagar,
Vinayagapuram, Kolathur,
Chennai-600099.
Defendant
The above defendant is put on notice that the above matter stands posted to 18.12.2023 for his appearance, and if he fails to appear in person or through Pleader before the Hon'ble XX ASST CITY CIVIL COURT, Chennai at 10.30 a.m. on 18.12.2023, he will be set exparte and the matter will be taken up and decided in his absence.
Counsel for Plaintiff
R. Thirumalai,
Advocate,

IVJUDGE
Before the Motor Accident Claims Tribunal at Chennai
OP. 2930 Of 2023
Manikandan
....Petitioners
Vs
1. S.Sudhakar
2. Chola MS general ins.co. ltd.,
....Respondents
To.
S.Sudhakar S/o Srinivasan,
No.1/26, Pillayar Kovil Street,
Vichur post, perungavur,
Chennai -600103.
Take notice the above said matter was posted on 06.12.2023 for your apperance before The small causes courtChennai.Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.00 a.m otherwise the matter will be absence.
G.Dinesh
D.Hemapriya
Counsel for Petitioner

